# தமிழ் (வினா விடைப்) அறிவுப்போட்டி

# Quiz Competition

## வென்றவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

Wentworthville Tamil Study Centre Inc.

www.wtsc.org.au

# தமிழ் அறிவு (வினா விடைப்) போட்டி

## போட்டி விதிமுறைகள்

1. ஒரு வகுப்பைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் ஒரே விடயம்(கள்) வினா விடைப் போட்டியில் கேட்கப்படும்.
2. பங்குபற்றும் மாணவர்கள் போட்டி ஆரம்பிக்கும் முன்னர் பாடசாலைக்கு சமுகம் அளிக்க வேண்டும்.
3. இப்போட்டிகள் கீழ் வகுப்பு மாணவர்கள், மேல் வகுப்பு மாணவர்கள் என இரண்டு பிரிவுகளாக நடைபெறும்.
4. கீழ் வகுப்பு மாணவர்களிடம் 10 முதல் 15 தமிழ் அறிவு சம்பந்தமான கேள்விகளும் மேல் வகுப்பு மாணவர்களிடம் 15 கேள்விகளும் கேட்கப்படும்.
5. மேல் வகுப்பு மாணவர்களுக்கு தமிழ் அறிவுப் போட்டிகள் மூன்று சுற்றுக்களாக நடைபெறும். முதலாம் சுற்றிலிருந்து இரண்டாம் சுற்றிற்கு 8 மாணவர்களும், இரண்டாம் சுற்றிலிருந்து இறுதிச் சுற்றிற்கு 4 மாணவர்களும் தெரிவு செய்யப்படுவார்கள்.
6. ஒவ்வொரு வகுப்பிலும் முதல் மூன்று பிரிவுகள்/இடங்களைப் பெறும் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். போட்டிகளில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
7. இப்போட்டிகள் ஆண்டு 12 மாணவர்களுக்கு நடைபெற மாட்டாது.

# தமிழ் அறிவுப்போட்டி: கீழ் வகுப்பு

ஆரம்ப பள்ளி முதல் ஆண்டு 4 வரை, இணைப்பு வகுப்புக்கள், ஆண்டு 4-6 - நாவலர், ஆண்டு 7-9 விபுலானந்தர்.

- தமிழ் அறிவுப் போட்டிகள் வகுப்பு ரீதியாக நடைபெறும்.
- ஒவ்வொரு வகுப்புகளிற்குமான மாதிரி வினாக்கள் எமது இணையத்தளத்தில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது. நீங்கள் பாடசாலை இணையத்தளத்தில் (wtsc.org.au) இருந்து மாதிரி வினாக்களை தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

### போட்டிக்கான வினாக்கள்

1. பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்கள்
2. படங்களிற்கான பெயர் சொல்லுதல்.
3. தமிழ் தொடர்பான பொது அறிவுகள்.
4. கீழ் வகுப்பு மாணவர்களிடம் 10 முதல் 15 தமிழ் அறிவு சம்பந்தமான கேள்விகள் கேட்கப்படும்.
5. கேள்விகள் மாதிரி வினாக்களிலிருந்தும் மற்றும் பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்களிலிருந்தும் தெரிவு செய்யப்படும்.
6. மாணவர்களிற்கு வினாக்கள் வாசித்து காட்டப்படும். அவர்கள் சரியான பதிலை கூற வேண்டும்.
7. மாணவர்கள் ஒவ்வொருவராக உங்களிடம் கேட்கப்படும் வினாக்களிற்கு விடையளிக்க வேண்டும்.
8. ஒவ்வொரு வினாக்களிற்கும் 30 வினாடிகள் மாத்திரமே கொடுக்கப்படும்.
9. நடுவர்களாக வகுப்பு ஆசிரியர்களும் பெற்றோர் ஒருவரும் (பிள்ளைகள் அந்த வகுப்பில் இல்லாத பெற்றோர்) கடமையாற்றுவார்கள்.

**10.** வினாடி வினா போட்டி விதிமுறைகள் : ஆரம்ப பள்ளி/ஆண்டு 1
வினாடி வினா போட்டி விதிமுறைகள் : ஆண்டு 2
வினாடி வினா போட்டி விதிமுறைகள் : ஆண்டு 3
வினாடி வினா போட்டி விதிமுறைகள் : ஆண்டு 4

## பரிசில்கள் வழங்குவதற்கான விதிமுறைகள்

ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்களின் உயர் புள்ளி 100% இற்கு தரப்படுத்தப்பட்டு (standardised) அதிலிருந்து மற்றைய மாணவர்களின் புள்ளிகள் அதற்கேற்ப வரிசைப்படுத்தப் பட்டு தரம் பிரிக்கப்படும். 35 புள்ளிகளிற்கு மேல் பெற்ற மாணவர்கள் மாத்திரமே சான்றிதழ்களுக்கு தகுதி வாய்ந்தவர்களாவர். போட்டிக்கான பெறுபேறுகள் முதலாம், இரண்டாம், மூன்றாம் பிரிவுகள் என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டிகளில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்

| | |
|---|---|
| 90 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுதவர்கள் அத்துடன் முதல் 20% மாணவர்கள். | முதலாம் பிரிவு |
| 80 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள் (90 புள்ளிகளுக்குக் கீழ்) அத்துடன் அடுத்த 20% மாணவர்கள். | இரண்டாம் பிரிவு |
| 70 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள் (80 புள்ளிகளுக்குக் கீழ்) அத்துடன் அடுத்த 20% மாணவர்கள். | மூன்றாம் பிரிவு |
| 35 அல்லது 35 புள்ளிக்கு மேல் எடுத்த எஞ்சியுள்ள மாணவர்கள். | திறமைச் சான்றிதழ் |
| 35 புள்ளிகளுக்குக் குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள். | பங்குபற்றியமைக்கான சான்றிதழ்கள் |

## தமிழ் அறிவுப்போட்டி: ஆண்டு 5 முதல்11 வரை மற்றும் ஆண்டு 10 பரணர்.

1. ஆண்டு 5 முதல் ஆண்டு 11 வரையான வகுப்பு மாணவர்களுக்கு தமிழ் அறிவுப் போட்டிகள் மூன்று சுற்றுக்களாக நடைபெறும். முதலாம் சுற்றிலிருந்து இரண்டாம் சுற்றிற்கு 8 மாணவர்களும், இரண்டாம் சுற்றிலிருந்து இறுதிச் சுற்றிற்கு 4 மாணவர்களும் தெரிவு செய்யப்படுவார்கள்.

2. முதல் சுற்று போட்டி மாணவர்களுக்கு வினாத்தாள் வழங்கப்பட்டு அதற்கான விடைகளை குறித்த நேரத்தில் எழுதி முடிக்கவேண்டும்.
3. சுற்று 2 போட்டிக்கான வினாக்கள் திரையில் காண்பிக்கப்படும். மாணவர்கள் கேட்கப்படும் வினாக்களிற்கு விடையளிக்க வேண்டும்.
4. சுற்று 3 போட்டிக்கான வினாக்கள் திரையில் காண்பிக்கப்படும். மாணவர்கள் கேட்கப்படும் வினாக்களிற்கு விடையளிக்க வேண்டும்.
5. ஒவ்வொரு வகுப்பு மாணவர்களிற்கும் போட்டிகள் தனித்தனியாக நடைபெறும்.
6. ஆண்டு 10 - பரணர் வகுப்பு மாணவர்களிற்கு அவர்களின் வகுப்புகளில் தமிழ் அறிவுப் போட்டி நடைபெறும்.

**அனைத்துச்சுற்று போட்டிகளுக்கான வினாக்கள் பற்றிய விபரம்**

ஒவ்வொரு வகுப்புகளிற்கும் மாதிரி வினாக்கள் எமது இணையதளமான wtsc.org.au வெளியிடப்படும்.

மாதிரி வினாக்களை இணையத்தளத்தில் இருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

***போட்டிக்கான வினாக்கள்:***

- வகுப்புக்களில் அல்லது பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்கள்.
- தமிழ் மொழி, கலாசாரம், வரலாறு மற்றும் தமிழ் தொடர்பான பொது அறிவுகள்.

**முதலாம் சுற்றுகான விதிமுறைகள்.**

ஒவ்வொரு வகுப்பு மாணவர்களிற்கும் போட்டிகள் தனித்தனியாக நடைபெறும்.

முதலாம்சுற்று போட்டி வகுப்புகளில் நடைபெறும்.

15 வினாக்கள் மாணவர்களிடம் கேட்கப்படும். (15 questions asked to students)

30% மான வினாக்கள் மாதிரி வினாக்களிலிருந்தும் 70% மான வினாக்கள் பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்களிலிருந்தும், தமி**ழ்**மொழி, கலாசாரம், வரலாறு மற்றும் தமிழ்பொதுஅறிவு அறிவுகளிலிருந்தும் தெரிவுசெய்யப்படும். (30% of the questions are from general knowledge and 70% from textbooks on Tamil language, culture, history, and general knowledge.)

மூன்று அல்லது நான்கு விடைகளில் சரியான விடையைத் பதிவு செய்யவேண்டும். (Students must provide the correct answers in three or four choices.)

சில வினாக்களிற்கு விடைகள் கொடுக்கப்படமாட்டாது. மாணவர்கள் சரியான விடையைக் கூறவேண்டும். (Some questions are open-ended. Students must provide the correct answers.)

ஒவ்வொரு வினாக்களிற்கும் 30 வினாடிகள் மாத்திரமே கொடுக்கப்படும். (Each question will be given 30 seconds.)

நடுவர்களாக வகுப்பு ஆசிரியர்களும் பெற்றோர் ஒருவரும் (அந்த வகுப்பில் படிக்காத மாணவர்களின் பெற்றோர்) கடமையாற்றுவார்கள். (Teachers and parents of students who are not enrolled in that subject will be observers.)

அனைத்து வகுப்பறையில் இருந்தும் அதிகூடிய புள்ளிகளை பெற்ற முதல் 8 மாணவர்கள் இரண்டாம் சுற்றுக்கு தெரிவுசெய்யப்படுவர். (The top 8 students from each class will qualify for the second round**.)**

**இரண்டாம் சுற்று போட்டிக்கான விதிமுறைகள்.**

முதலாம் சுற்றில் அதிகூடிய புள்ளிகளை பெற்ற 8 மாணவர்கள் இரண்டாம் சுற்றுக்கு தெரிவுசெய்யப்படுவர். (The top 8 students with the highest scores will qualify for the second rounds.)

இப்போட்டிகள் வினா விடைப் போட்டியாக (Quiz) நடைபெறும். (These quizzes will be held as a part of the quiz sections.)

போட்டிக்கான வினாக்கள் திரையில் காண்பிக்கப்படு கேள்விகள் வாசித்து விடப்பட்டும். கேள்விகள் வாசித்து முடிக்கும்வரை மணியை (Bazar) அழுத்த முடியாது. கேள்விகள் வாசித்து முடிந்ததும் முதலில் மணியை (Bazar) அழுத்துபவரிற்கு முதல் சந்தர்ப்பம் வழங்கப்படும். (The questions for the competition will be displayed on the screen and read aloud. The buzzer cannot be pressed until the questions are fully read. After the questions are completely read, the first person to press the buzzer will be given the first opportunity to answer.)

சரியாக பதிலளித்தால் 5 புள்ளிகள் வழங்கப்படும். தவறாக பதிலளித்தால் 2 புள்ளிகள் கழிக்கப்படும் (குறைக்கப்படும்). (If answered correctly, 5 points will be awarded. If answered incorrectly, 2 points will be deducted.)

முதல் மாணவன் தவறாக பதிலளித்தால், முதல்தரத்தில் இரண்டாவதாக மணியை (Bazar) அழுத்துபவரிற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். சரியாக பதிலளித்தால் 3 புள்ளிகள் வழங்கப்படும், தவறாக பதில் கூறினால் புள்ளிகள் கழிக்கப்படமாட்டாது. (If the first student answers incorrectly, consultation will be given to the second. If answered correctly, 3 points will be awarded, if incorrectly, no points will be deducted.)

ஒரு மாணவர் பதிலளிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் மட்டுமே வழங்கப்படும். (Only one consultation will be given per student.)

15 வினாக்கள் மாணவர்களிடம் கேட்கப்படும். (Students will be asked 15 questions.)

30% மான வினாக்கள் மாதிரி வினாக்களிலிருந்தும் 70% மான வினாக்கள் பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்களிலிருந்தும், தமிழ; மொழி, கலாசாரம், வரலாறு மற்றும் தமிழ; பொது அறிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்படும். (Questions will be asked from both textbook and non-textbook sources, including Tamil language, culture, history, and general knowledge.)

ஒவ்வொரு வினாக்களிற்கும் 30 வினாடிகள் கொடுக்கப்படும். (Each question will have a time limit of 30 seconds.)

இரண்டாம் சுற்றில் பங்குபற்றிய 8 மாணவர்களில் அதி கூடிய புள்ளிகளை பெற்றே முதல் 4 மாணவர்கள் இறுதிச்சுற்றுக்கு தெரிவுசெய்வயப்படுவர். (Among the 8 students who participated in the second round, the top 4 students who scored the highest will advance to the final round.)

இறுதிசுற்றுப்போட்டிக்கான விதிமுறைகள்.

இரண்டாம் சுற்றில் பங்குபற்றிய 8 மாணவர்களில் அதி கூடிய புள்ளிகளை பெற்றே முதல் 4 மாணவர்கள் இறுதிச்சுற்றுக்கு தெரிவுசெய்வயப்படுவர். (Among the 8 students who participated in the second round, the top 4 students who scored the highest will advance to the final round.)

இப்போட்டிகள் வினா விடைப் போட்டியாக (Quiz) நடைபெறும். (These quizzes will be held as a part of the quiz sections.)

போட்டிக்கான வினாக்கள் திரையில் காண்பிக்கப்படு கேள்விகள் வாசித்து விடப்பட்டும். கேள்விகள் வாசித்து முடிக்கும்வரை மணியை (Bazar) அழுத்த முடியாது. கேள்விகள் வாசித்து முடிந்ததும் முதலில் மணியை (Bazar) அழுத்துபவரிற்கு முதல் சந்தர்ப்பம் வழங்கப்படும். (The questions for the competition will be displayed on the screen and read aloud. The buzzer cannot be pressed until the questions are fully read. After the questions are completely read, the first person to press the buzzer will be given the first opportunity to answer.)

சரியாக பதிலளித்தால் 5 புள்ளிகள் வழங்கப்படும். தவறாக பதிலளித்தால் 2 புள்ளிகள் கழிக்கப்படும் (குறைக்கப்படும்). (If answered correctly, 5 points will be awarded. If answered incorrectly, 2 points will be deducted.)

முதல் மாணவன் தவறாக பதிலளித்தால், முதல்தரத்தில் இரண்டாவதாக மணியை (Bazar) அழுத்துபவரிற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். சரியாக பதிலளித்தால் 3 புள்ளிகள் வழங்கப்படும், தவறாக பதில் கூறினால் புள்ளிகள் கழிக்கப்படமாட்டாது. (If the first student answers incorrectly, consultation will be given to the second. If answered correctly, 3 points will be awarded, if incorrectly, no points will be deducted.)

ஒரு மாணவர் பதிலளிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் மட்டுமே வழங்கப்படும். (Only one consultation will be given per student.)

15 வினாக்கள் மாணவர்களிடம் கேட்கப்படும். (Students will be asked 15 questions.)

30% மான வினாக்கள் மாதிரி வினாக்களிலிருந்தும் 70% மான வினாக்கள் பாடப்புத்தகங்க் ளில் கொடுக்கப்பட்ட விடயங்களிலிருந்தும், தமிழ; மொழி, கலாசாரம், வரலாறு மற்றும் தமிழ; பொது அறிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்படும். (Questions will be asked from both textbook and non-textbook sources, including Tamil language, culture, history, and general knowledge.)

ஒவ்வொரு வினாக்களிற்கும் 30 வினாடிகள் கொடுக்கப்படும். (Each question will have a time limit of 30 seconds.)

இறுதிச்சுற்றில் பங்குபற்றிய 4 மாணவர்களில் அதி கூடிய புள்ளிகளை பெற்றவர்களின் வரிசைப்படி முதலாம் இரண்டாம் , மூன்றாம் மற்றும் இறுதிச்சுற்று போட்டியாளராக தெரிவுசெய்யப்படுவார்கள். (The students who scored the highest number of points among the 4 participants in the final round will be ranked as first, second, third, and finalist accordingly.)

பரிசில்கள்:

ஒவ்வொரு பிரிவிலும் முதல், இரண்டாம், மற்றும் மூன்றாம் இடங்களுக்கான பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். நான்காவது மாணவர் இறுதிச்சுற்று போட்டியாளராக கௌரவிக்கப்படுவார். Prizes and certificates will be awarded for the first, second, and third places. The fourth student will be recognized as a finalist).

இரண்டாம் சுற்றுக்கு முன்னேறிய மாணவர்கள் உயர்மட்ட சான்றிதழ் வழங்கப்படும். (Students who move to the second round will be awarded a highly commended certificate)

பங்குபற்றிய அனைத்து மாணவர்களிற்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். Certificates of participation will be awarded to all participants in the competition.